வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 42 of 2019

வழக்கு சாட்சி – PW 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மணிகண்டன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் | தொழில் | : | பவர் லூம் தொழில் |
| கிராமம் | : | சேடபாளையம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20.11.2023.

(2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. 1ஆம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

முதல் விசாரணை: நாள்: 20.11.2023.

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு பவர் லூம் வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 27.09.2018 ஆம் தேதி மதியம் 12.30 மணியளவில் குமரன் கார்டன் வழியாக வீட்டிற்கு சாப்பாட்டிற்கு செல்வேன். குமரன் கார்டன் அருகே பிரச்சனை நடந்ததாக சொன்னார்கள். பிறகு 2 நாட்கள் கழித்து காலை 7.00 மணியளவில் சம்பவ இடமான குமரன் கார்டனை போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக நானும், பக்கது பெட்டி கடை வைத்துள்ள நபரும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டதற்கு என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் ரோட்டில் செல்லும் போது கையொப்பம் போட்டு கொடுத்தேன். நான் டைப் செய்த பேப்பரில் கையொப்பம் செய்தேன். போலீசார் சம்பவ

இடத்திலேயே தட்டச்சு செய்தார்கள். உண்மையில் எனக்கு சம்பவ இடத்தை பற்றி தெரியாது என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.11.20 19:26:56 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.